இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 14-09-2023

# ‘சனாதன’ ரவி

சில நாட்களாகச் சத்தமில்லாமல் இருந்தார் ஆளுநர் ஆர்.என். ரவி. திடீரென்று அவர் பெயரால் ஒரு அறிக்கை வந்திருக்கிறது. அதை வைத்துப் பார்க்கும் போதுதான், மிக முக்கியமான ஒரு காரியத்தில் அவர் இருந்திருப்பதை அறிய முடிகிறது. ‘சனாதனம்’ குறித்த ஆராய்ச்சியில் இருந்திருக்கிறார்.

**சனாதன தர்மம் குறித்து ஆளுநர் ஆர்.என்.ரவி அளித்துள்ள விளக்கத்தை ‘தினத்தந்தி’ நாளிதழ் (12.9.2023) வெளியிட்டுள்ளது. ‘சாதி சமூகப் பாகுபாடுகளுக்கு சனாதன தர்மத்தில் ஒருபோதும் இடமில்லை’ என்று ஆளுநர் சொல்வதாக அந்த நாளிதழ் தலைப்பு போட்டுள்ளது. ஏனென்றால் அந்த தலைப்பு மட்டும்தான் அவரது அறிக்கையில் புரியும். மற்றவை எல்லாம் அவருக்கு மட்டுமே புரியும் கருத்துகள் ஆகும்.**

சனாதனம் என்றால் ஆன்மிகம், வாழ்க்கை மற்றும் படைப்பு தொடர்பானதாம். இது ஒத்திசைவான கலாச்சாரத்தின் பரிணாம வளர்ச்சிக்கு வழிவகுக்கிறதாம். திடீரென்று ரிக் வேதத்தை ஆதாரமாகக் காட்டுகிறார். அதுதான் சனாதன தர்மத்தின் முதல் ஆவணப்படுத்தப்பட்ட வெளிப்பாடு என்கிறார். திடீரென உலக சமயங்கள் அனைத்துக்கும் தானே அத்தாரிட்டியைப் போல ஏதேதோ சொல்கிறார். உலகம் ஒரு குடும்பம் என்பதும் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பதும், வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்பதும் சனாதன தர்மம் என்று முடிக்கிறார்.

இதில் இருந்து ஒட்டுமொத்தமாக அவர் சொல்ல வருவது, சனாதன தர்மம் என்பது ஒற்றுமையைத்தான் போதிக்கிறது என்கிறார். சனாதன தர்மம் என்று இவர்கள் இதுவரை எதை எல்லாம் சொல்லி வந்தார்களோ, அதை எல்லாம் அவர்களே மறுத்துச் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். இதுதான் மாண்புமிகு அமைச்சர் உதயநிதி போட்ட போடால் ஏற்பட்ட விளைவு ஆகும்.

**மனிதர்களுக்குள் பேதமில்லை என்று சொல்லிய போது, ‘இல்லை! பேதம் உண்டு, அது பிறப்பால் வருவது, இது ஆதியில் இருக்கிறது, கீதையில் இருக்கிறது, ரிக் வேதத்தில் இருக்கிறது, மனுவில் இருக்கிறது’ என்று சொல்லி நியாயப்படுத்தி வந்தவர்கள், ‘ஐயையோ! அப்படி எந்த வேறுபாடும் எதிலும் இல்லை’ என்று இப்போது சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள்.**

‘என் தோப்பு மாமரத்துல நீ ஏன் ஏறுகிறாய்?’ என்று கேட்டார் தோட்டக்காரர். மாட்டிக் கொண்டவன் சொன்னான்:’ தேங்காய் பறிக்கப் போனேன்’ என்றானாம். ‘மா மரத்துல தேங்காய் எப்படி இருக்கும்?’ என்று கேட்டார் தோட்டக்காரர். ‘இல்லைன்றதுனால தான் இறங்குகிறேன்’ என்றானாம். அப்படி இருக்கிறது இவர்களது வியாக்கியானங்கள் எல்லாம்!

**சனாதனத்தை தான் அமைச்சர் உதயநிதி விமர்சித்தார். மதத்தையே விமர்சித்துவிட்டதாகப் பரப்பினார்கள் பா.ஜ.க.வினர். இறை நம்பிக்கை வேறு - சனாதனம் வேறு என்பதே இவர்களுக்குத் தெரியவில்லை. மதத்தை கபளீகரம் செய்தது சனாதனம். அது தான் இந்தியாவில் எதிர் கொண்ட பிரச்சினையே!**

புகழ்பெற்ற வேதப்பண்டிதரான அ.ச.பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் என்பவர் உலகம் முழுக்க பயணம் செய்து கீதையைப் பரப்பியவர். அவர் எழுதிய முக்கியமான நூல், ‘பகவத் கீதை உள்ளது உள்ளபடி’ என்பது ஆகும். ‘ஆங்கில வார்த்தையான ரிலிஜன் என்பது ஸநாதன தர்மம் என்பதில் இருந்து வேறுபட்டதாகும். ரிலிஜன் என்பது ஒருவித நம்பிக்கையைக் குறிக்கும். நம்பிக்கை என்பது மாறக் கூடும். ஒரு குறிப்பிட்ட முறையில் ஒருவருக்கு நம்பிக்கை இருக்கலாம். அவர் தமது நம்பிக்கையை மாற்றி வேறொரு நம்பிக்கையைக் கடைப்பிடிக்கலாம். ஆனால் ஸநாதன தர்மம் என்பது மாற்ற முடியாத செயலைக் குறிக்கும்’ (பக்கம்21) என்று எழுதி இருக்கிறார்.

‘மனித சமுதாயத்தின் நால்வகை பிரிவுகள் என்னால் ஏற்படுத்தப்பட்டன. இம்முறையை படைத்தவன் நானேயாயினும் இதனை மாற்ற என்னாலே முடியாது’ என்கிறது கீதை. (அத்தியாயம் 4 ; ஸ்லோகம் 13).தங்களது சுபாவத்திலிருந்து பிறந்த குணங்களுக்கு ஏற்ற தன்மையில் தான் இந்த நால்வரும் வேறுபடுத்தப்படுகிறார்கள்.( அத்தியாயம் 18; ஸ்லோகம் 41). பிராமணர் - சத்திரியர் - வைசியர் - சூத்திரர் ஆகிய நான்கு பிரிவும் செய்ய வேண்டிய செயல், தொழிலைப் பற்றி ஸ்லோகம் 42,43,44 ஆகியவை சொல்கிறது. மற்ற மூன்று பிரிவினருக்கும் தொண்டு செய்வதே சூத்திரரின் வேலை என்கிறது ஸ்லோகம் 44. இந்தக் கடமையை மட்டும் செய் என்கிறது ஸ்லோகம் 47. இந்த தொழிலை விட்டு வேறு தொழிலைப் பார்க்காதே என்கிறது ஸ்லோகம் 48. இவை அனைத்தும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தை தொடங்கிய ஆச்சாரியர் என அழைக்கப்படும் பக்தி வேதாந்த சுவாமி பிரபு பாதர் எழுதியதுதான்.

பெண்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என கீழ் குலத்தைச் சார்ந்தவர்கள் பாவ ……யில் பிறந்தவர்கள் என்கிறது கீதை. (அத்தியாயம் 9; ஸ்லோகம் 32) இப்படியா எழுதுவது என்று சின்மயானந்தாவே கண்டித்திருக்கிறார். ‘பாவப்பட்ட குடும்பத்தில் பிறந்தவர்கள்’ என்று டீசெண்டாக எழுதி இருக்கிறார் பிரபு பாதர். (பக்கம் 524)

**எதில் பிறந்தாயோ அதில் தான் நீ இருக்க வேண்டும், எந்த குலத்தில் பிறந்தாயோ அந்த குலக் கடமையைத்தான் செய்ய வேண்டும். இதனால் துன்பம் அனுபவித்தால் அது உன் முன்வினைப் பாவம், அது உன் கர்ம வினை, இந்த தலையெழுத்தை நீ மாற்றவே முடியாது என்பது தான் இவர்கள் காலம் காலமாக கற்பிக்கும் தர்மம். கர்மம் - தர்மம் என்பதெல்லாம் அவரவர் ஜாதி, குலத் தொழிலை நிரந்தரமாகச் செய்து கொண்டே இருக்க வேண்டும் என்பதுதான். சனாதனம் என்றால் மாற்ற முடியாதது, மாறாதது என்று இவர்கள் சொல்வது எல்லாம் இதை வைத்துத்தான். பிறப்பை மாற்ற முடியாதது என்பதே சனாதனக் கொள்கை.**

கவர்னர், ரிக் வேதத்தை சரியாகப் படிக்க வேண்டும். ரிக் வேதத்தின் பத்தாவது மண்டலம், 96ஆவது ஸ்லோகத்தை வாசிக்கவும். அதில் இது சொல்லப்பட்டுள்ளது. அல்லது திருச்சி கல்யாணராமன் பிரசங்கம் கேட்கவும். சனாதனத்தை முழுமையாக அறியலாம்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.9.2023) முகாம் அலுவலகத்தில், கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், வேலூர் மாவட்டக் கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார், வேலூர் மாநகர கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ப.கார்த்திகேயன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் தி.அ.முகமது சகிஆகியோர் சந்தித்து, வேலூரில் 17.9.2023 அன்று நடைபெறவுள்ள தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா, தி.மு.க. பவள விழா மற்றும் தி.மு.க. முப்பெரும் விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்கள்.

### வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை!

# சீரான மின் விநியோகம் குறித்து விரிவான ஆய்வு!

## அமைச்சர் தங்கம் தென்னரசு மேற்கொண்டார்!

சென்னை, செப்.14-

தமிழ்நாடு மின்வாரிய தலைமை அலுவலகத்தில், நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு எதிர்வரும் வடகிழக்கு பருவ மழையினை எதிர்கொள்ள மின்துறை சார்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் சீரான மின் விநியோகம் வழங்குவது குறித்து விரிவான ஆய்வினை காணொலி மூலம் மேற்கொண்டார். இக்கூட்டத்தில் அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள், அனைத்து மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த சிறப்பு ஆய்வுக் கூட்டத்தில், மின் பகிர்மான வட்டங்களில் 30 நிமிடங்களுக்கு மேல் மின் தடங்கல் ஏற்பட்ட நிகழ்வுகள் குறித்தும், அதற்கான காரணங்கள் குறித்தும் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் அமைச்சர் அவர்கள் கேட்டறிந்து, தொடர்ச்சியாக மின்தடங்கல் ஏற்படும் இடங்களில் சிறப்பு கவனம் செலுத்தி அதற்கான காரணத்தை கண்டறிந்து உடனடியாக சரி செய்வதற்கும், அனைத்து அலுவலர்களுக்கும் உத்தரவிட்டார். மேலும், மின்னகம் மூலம் பொது மக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் குறித்து உடனடி நடவடிக்கை எடுக்குமாறும், பொது மக்கள் அனைவருக்கும் தடையில்லா, சீரான மின்சாரம் தொடர்ந்து கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தினார்.

எதிர்வரும் வடகிழக்கு பருவமழை காலங்களின் போது மின்சார வாரியம் சார்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விரிவான ஆய்வினை மேற்கொண்ட அமைச்சர் அவர்கள், மின்சார சீரமைப்பு பணிகளில் ஈடுபடும் பொறியாளர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் தகுந்த முன்னெச்சரிக்கையுடனும், உரிய பாதுகாப்புடனும் செயல்படுமாறும், பணியாளர்களுக்கு தேவையான அனைத்து பாதுகாப்பு உபகரணங்களையும் அளித்து பாதுகாப்பான முறையில் மின்கட்டமைப்பை சீர் செய்யும் பணியில் ஈடுபடுமாறும், மின்சார சீரமைப்பு பணிகளுக்கு தேவையான JCB வாகனங்களை முன்கூட்டியே தயார் நிலையில் வைத்துக் கொள்ளுமாறும், அனைத்து வாரிய வாகனங்களையும் தயார் நிலையில் வைத்துக் கொள்ளுமாறும், தேவைப்படின் அருகாமையில் உள்ள மின்பகிர்மான வட்டங்களிலிருந்து பணியாட்களை பணிகளில் ஈடுபடுத்துமாறும், மேலும், இத்தகைய பருவ மழைக்காலங்களின் போது மாவட்ட நிர்வாகத்தினருடன் எப்போதும் தொடர்பில் இருக்குமாறும் அனைத்து அலுவலர் களுக்கும் உத்தரவிட்டார்.

அனைத்து மேற்பார்வை பொறியாளர்களும் தமது அலுவலகங்களில் இதற்கென தனியாக குழு அமைத்து கன மழையின் போது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், சேதாரங்கள் குறித்தும் ஆய்வு செய்து உடனடியாக அனைவருக்கும் தகவல் தெரிவிக்க வேண்டும் எனவும், மின் கட்டமைப்பில் ஏற்படும் சேதாரங்களை பொறுத்து சம்பந்தப்பட்ட மேற்பார்வை பொறியாளர்கள் தேவைப்படும் பணியாளர்கள் மற்றும் தளவாடப் பொருட்களுடன் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள தயார் நிலையில் இருக்குமாறும், குறிப்பாக சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை உடனுக்குடன் கள ஆய்வு செய்து மின் விநியோகத்தை உடனடியாக சீர் செய்யுமாறும் சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்களுக்கும் அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

பருவ மழை காரணமாக மின் இணைப்பு துண்டிக்கப்பட்டால் முன்னுரிமை அடிப்படையில், மாவட்டங்களில் உள்ள அனைத்து மருத்துவமனைகள் மற்றும் குடிநீர் இணைப்புகளுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்க வேண்டும் என அமைச்சர் அவர்கள் அனைத்து அலுவலகர்களுக்கும் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷு மஹாஜன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மக்களவை, சட்டப்பேரவை, உள்ளாட்சி அமைப்புகளுக்கு

# ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த ரூ.10 லட்சம் கோடி செலவாகும்!

## ஆய்வாளர் பாஸ்கரராவ் தகவல்!

புதுடெல்லி, செப்.14-

நாடு முழுவதும் உள்ள அனைத்து மக்களவை, சட்டப்பேரவை மற்றும் உள்ளாட்சி தொகுதிகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த ரூ.10 லட்சம் கோடி செலவாகும் என கணிக்கப்பட்டுள்ளது. தேர்தல் செலவை குறைக்கவும், அரசின் திட்டங்கள் தடையின்றி செயல்படவும் நாடு முழுவதும் அனைத்து மக்களவை, சட்டப்பேரவை மற்றும் உள்ளாட்சிகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த வேண்டுமென ஒன்றிய பா.ஜ. அரசு வலியுறுத்தி வருகிறது. இந்தநிலையில், தேர்தல் செலவு குறித்து பல்வேறு புத்தகங்களை எழுதியவரும், அரசு கொள்கைகளின் ஆய்வாளருமான பாஸ்கரராவ் கூறியிருப்பதாவது:-

எனது கணிப்புப்படி, ஒரே நேரத்தில் அனைத்து தேர்தல்களையும் நடத்தினால் ரூ.10 லட்சம் கோடி வரை செலவாகலாம். 2024ம் ஆண்டு மக்களவை தேர்தல் நடத்த ரூ.1.20 லட்சம் கோடியும். நாடு முழுவதும் உள்ள 4500 சட்டப்பேரவைகளுக்கும் தேர்தல் நடத்த ரூ.3 லட்சம் கோடியும், அனைத்து மாநகராட்சிகளுக்கு (500 இடங்கள்) தேர்தல் நடத்த ரூ.1 லட்சம் கோடியும் ஜில்லா பரிஷத் (650) தேர்தல் நடத்த (ரூ.2.5) லட்சம் கோடியும், நகராட்சி (7000) ஊராட்சிகளுக்கு தேர்தல் நடத்த ரூ.4.30 லட்சம் கோடியும் செலவாகும்.

இதில் தேர்தல் ஆணையம் 20 சதவீதம் மட்டுமே செலவழிக்கும். இந்த செலவில், புதிய மின்னணு இயந்திரங்கள் வாங்குவது சேர்க்கப்படவில்லை. இதுதவிர ஒன்றிய, மாநில அரசுகள் மட்டுமே அனைத்து செலவையும் செய்வதில்லை. கட்சிகளும், வேட்பாளர்களும் பிரசாரத்திற்காக செலவு செய்கின்றன. பொதுவாக தேர்தல் தேதி அறிவிக்கும் முன்பே பிரச்சாரம் தொடங்கி விடுகிறது. தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து முடியும் வரை வேட்பாளர்கள் மட்டுமே செலவு கணக்கை தேர்தல் ஆணையத்திடம் தர வேண்டுமே தவிர, கட்சிகள் தர வேண்டியதில்லை.

கடந்த 2019 மக்களவை தேர்தலுக்கு முன்பாக கட்சிகள் ரூ.6,400 கோடி வசூலித்து, தேர்தலில் ரூ.2,600 கோடி செலவிட்டன. எனவே ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதால் தேர்தல் செலவு கணிசமாக குறைந்து விடாது. பிரசாரம், தேர்தல் அதிகாரிகளின் செயல்திறன் மற்றும் தேர்தல் நடத்தை விதிகளை கட்சிகள் முழுமையாக பின்பற்றுவது ஆகியவற்றின் மூலம் மட்டுமே தேர்தல் செலவை கட்டுப்படுத்த முடியும். ஒரே வாரத்தில் அனைத்து தேர்தலும் நடத்தி முடித்து, கட்சிகளும் முழுமையாக தேர்தல் நடத்தை விதிகளை பின்பற்றினால் ரூ.3 லட்சம் கோடி முதல் ரூ.5 லட்சம் கோடி வரை செலவை மிச்சப்படுத்தலாம். ஓட்டுக்கு பணம் கொடுப்பதை கட்டுப்படுத்தாமல் தேர்தல் செலவை கணிசமாக குறைக்கவும் வாய்ப்பில்லை இவ்வாறு அவர் கூறி உள்ளார்.



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (12.09.2023) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி தலைமையில் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பயிற்சி ஹர் சஹே மீனா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சிறப்பு செயலாளர் ஜெ.ஜெயகாந்தன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.